# வெல்லவாய பிரதேச சபை

# மொனராகலை மாவட்டம்

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

---

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 24 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 10 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜுன் 23 ஆந் திகதி சபைச் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

---

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வெல்லவாய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசோட்டமும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் வருட இறுதியில் ரூபா 240,225,624 தொகை என கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில் தகைமையுடைய பெறுமதி மதிப்பீட்டு தொழிலில் அங்கத்துவர் ஒருவரினால் பெறுமதி மதிப்பீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத நிர்மாண வேலை முற்பணக் கணக்கின் மீதி நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 5,851,603 தொகையாகக் காணப்பட்டதுடன் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 6,410,089 தொகையாகக் காணப்பட்டமையால் ரூபா 558,486 தொகைக்கான வித்தியசாம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(இ) சபைக்குச் சொந்தமான சுனு-9455 போடோன் டிரக்டர், ரூணுயு ஜே.ஸீ.பீ. இயந்திரம் மற்றும் பாதை தகர்க்கும் இயந்திரம் என்பவற்றின் கிரயத்தை கண்டறியாமல் ரூபா 27,116,323 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) சபைக்குச் சொந்தமான கணக்கீடு செய்யப்படாத 65 மயானக் காணித் துண்டுகள் மற்றும் வேறு 20 காணித் துண்டுகள் என்பனவற்றை இனங்கண்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழிற்தகைமையுடைய பெறுமதி மதிப்பீட்டு தொழிலில் அங்கத்துவர் ஒருவரினால் பெறுமதி மதிப்பீடு செய்திருக்கவில்லை.

1.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1995 முதல் 2000 வரை மற்றும் 2002 முதல் 2008 வரை 14 வருடங்கள் தொடர்பாக சபையினால் செலுத்தப்பட வேண்டிய ரூபா 269,756 தொகை கணக்காய்வுக் கட்டணத்தைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) பல வருட காலமாக முன்கொண்டு வரப்படும் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபையின் பலவித கட்டிடங்கள் மற்றும் 08 பல்வேறு இடங்கள் தொடர்பாக தேசிய நீர் வழங்கள் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 1,190,503 தொகை நீர்க் கட்டணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தில் இலக்கம் குறிப்பிடாத 2012 திசெம்பர் 24 திகதிய கடிதத்தின் பிரகாரம் பெறுமதி கூட்டிய வரியினை இரத்து செய்தமையால் 2012 திசெம்பர் 31 திகதிக்கு முன்னர் அறவிடப்பட வேண்டிய வரித் தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், 2005 ஆண்டு முதல் 2013 மார்ச் வரை அறவீடு செய்திருந்த ரூபா 1,813,914 தொகை பெறுமதியான பெறுமதி கூட்டிய வரியினை செலுத்த வேண்டிய வைப்புக்களின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிப் பங்களிப்புத் தொகை நிலுவைத் தொகையாகிய ரூபா 969,318 தொகையினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.3. கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 241,549,730 தொகைக்கான 03 சொத்து விடயங்கள் மற்றும் ரூபா 5,525,716 தொகைக்கான 03 பொறுப்பு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---------------------------------------------------------------------------------------------------------------

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | |
| (i) 19(1)(1) ஆம் பிரிவு | (அ) உள்ளூராட்சி ஆணையாளரின் எழுத்துமூலமான பூர்வாங்க அங்கீகாரம் இன்றி 2009 ஆண்டு முதல் மீளாய்வாண்டு அக்டோபர் 31 வரை அமைய மற்றும் பிரதியீட்டு அடிப்படையில் சாரதிகள், காவலாளிகள் மற்றும் தொழிலாளர்கள் ஆகிய பதவிகளுக்கு 15 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு சம்பளங்கள், படிகள், ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியப் பங்களிப்பு என ரூபா 11,281,204 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.<br>(ஆ) உள்ளூராட்சி ஆணையாளரின் பூர்வாங்க எழுத்துமூலமாக அங்கீகாரம் இன்றி சபையின் குப்பை அகற்றும் விடயங்களுக்கான ஒரு நாளைக்கு ரூபா 900 கொடுப்பனவு செய்யும் அடிப்படையில் 11 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 1,176,300 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) 49 ஆம் பிரிவு | திட்டக் குழுவின் அங்கீகாரம் இன்றி சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 5 தொலைபேசி கம்பனிகளினால் 15 டவர்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| நி.பி. 71 | 2014 நவம்பர் 12 திகதிய 25.∵.2014 கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கைக்கு முரணாக சபையின் அமைய மற்றும் பிரதியீட்டு அடிப்படையில் கடமையாற்றிய வெளிக்கள தொழிலாளர்கள், சுகாதாரத் தொழிலாளர்கள் மற்றும் இயந்திர இயக்குனர் ஆகிய பதவிகளில் 11 ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு வெளியே நிரந்தர சேவைக்கு நியமனம் செய்யப்பட்டிருந்தார்கள். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 14,175,429 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமாமனம் ரூபா 2,213,369 தொகையாகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் தேறிய அதிகரிப்பு ரூபா 11,962,060 தொகையாக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

---------------------------------

2.2.1 நிலுவை வருமானம்

---------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 25,940,706 தொகைக்கான நிலுவை வருமானத்தை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 158, 159 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்திருக்கவில்லை.

2.2.2 வீத வரி

----------------

(அ) மீளாய்வாண்டின் வீத வரி சிட்டையிடப்பட்ட பெறுமதி ரூபா 6,097,332 ஆகக் காணப்பட்டதுடன், 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நடைமுறை ஆண்டிற்கான வீதவரியாக சேகரித்திருந்தது ரூபா 1,522,368 தொகை ஆகும். அவை மொத்த சிட்டையிடப்பட்ட வருமானத்தில் 24 சதவீதம் ஆகிய குறைந்த சதவீதமாகும்.

(ஆ) 2015 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை வீத வரி வருமானம் ரூபா 8,566,302 ஆகக் காணப்பட்டதுடன் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வீத வரியாக சேகரித்திருந்ததது ரூபா 3,029,321 தொகையாகும். அவை 35 சதவீதம் ஆகிய குறைந்த சதவீதமே.

2.2.3 வாடகை

--------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் தொழில் நுட்ப உத்தியோகத்தர் மற்றும் வருமான நிருவாகியினால் தயாரிக்கப்பட்டிருந்த கட்டிட வரைபின் பிரகாரம் வெல்லவாய நகரத்தில் அமைந்துள்ள வரைபு இலக்கம் 940 கொண்ட காணி மற்றும் வெல்லவாய இலங்கை வங்கி மற்றும் புதிய வர்த்தக கட்டிடத் தொகுதிக்கு மத்தியில் அமைந்துள்ள காணியை கோள்வி கோரப்படாமல் சபை தீர்மானத்தின் மீது வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2011 திசெம்பர் 11 திகதி கேள்விதாரர்களுக்கு வாடகைக்கு கொடுப்பதற்கு முடியாத புதிய வர்த்தக கட்டிடத் தொகுதியினைச் சேர்ந்த 8 கடைகள் 2015 திசெம்பர் 11 திகதி வரை வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அத்துடன் 02 கடைகள் வேறு நபர்களுக்கு துணை வாடகைக்குக் கொடுக்கப்பட்டிருந்தது.

(இ) 2007 ஆண்டின் போது கேள்வி கோரப்பட்டு வாடகைக்கு கொடுப்பதற்கு முடியாதிருந்த வெல்லவாய பஸ் நிலைய மேல் மாடியில் உள்ள 03 கடைகள் 2015 திசெம்பர் 31 திகதி வரை வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காத 06 கடைகளை துணை வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

2.2.4 ஏனைய வருமானங்கள்

-----------------------------------

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 149 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் மற்றும் 1968 இன் 14 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்திச் சட்டத்தின் கருமங்களுக்காக இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் அதிகார சபையில் பதிவு செய்திருந்த அல்லது அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த அதிகாரப் பிரதேசத்தில் நடாத்தப்படும் ஹோட்டல்கள் ஒன்றில் இருந்தும் மற்றும் 04 தங்குமிடங்களில் இருந்தும் குறிப்பிட்ட வருடத்திற்கு முன்னைய ஆண்டின் பெறுகைகளின் மீது நூற்றிற்கு ஒன்றை மிகைக்காத கட்டணம் ஒன்றினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2013, 2014 மற்றும் மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமான 2 ஜே.சீ.பீ. இயந்திரங்கள் மற்றும் மோட்டார் கிரேட்டர் என்பற்றை வாடகைக்கு கொடுத்ததன் மூலம் 15 தனி நபர்கள் மற்றும் நிறுவனங்களில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,161,102 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.5 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

------------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டியிருந்த நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 5,585,712 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 2,501,931 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.3 மிகை விதிப்பு

------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 172(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்புச் சொல்ல வேண்டிய நபர்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட மிகை விதிப்புக்களின் பிரகாரம் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 70,338 ஆக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

--------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 05 பதவிகள் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை விட மிகையாக 17 பேர் சேவையில் ஈடுபடுத்தியிருந்தனர்.

(ஆ) பாதீட்டின் மூலம் நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமல் சபையின் பதவியணி வெற்றிடங்கள் காணப்படாத போதிலும் உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தைப் பெறாமல் பலவித கருமங்களுக்காக 11 பயிற்சி பெறுவோர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 832,000 தொகையொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) 2013 திசெம்பர் 09 திகதி உள்ளூராட்சி திணைக்களத்தின் மூலம் வழங்கியிருந்த 20 லீட்டர் குப்பை பாத்திரங்கள் 300 இல் 40 எண்ணிக்கையானவை காணாமல்

போயிருந்ததுடன் 260 பாத்திரங்கள் வினியோகிப்பதற்கு 2016 ஏப்ரல் 11 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) மின் சக்தி அமைச்சுச் செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 திகதிய கடிதத்தின் பிரிவு 2(1) இன் பிரகாரம் வீதி விளக்குகள் செயற்படுத்துதல் மற்றும் பராமரித்தலுக்கு கட்டணம் செலுத்தப்படும் அடிப்படையில் சேவை வழங்குனர் செயற்பட வேண்டும். எனினும் அவ்வாறு செய்யாமல் மீளாய்வாண்டின் போது இதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 124,200 தொகை செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) 2014 நவம்பர் 28 திகதி புத்தள பிரதேச சபையினால் வழங்கியிருந்த 304 ஜீ.ஐ. குழாய்கள் தொடர்பாக பெறுவனவுக் கட்டளை மூலம் பெற்று பொருட் பதிவேட்டில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அத்துடன் 2016 ஏப்ரல் 08 திகதி அளவில் 137 ஜீ.ஐ. குழாய்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் மீதியான 167 குழாய்களும் 2016 ஏப்ரல் 11 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 137 ஜீ.ஐ. குழாய்களில் 75 இனை துண்டுகளாக்கி தொழிலாளர் வீட்டுத் தொகுதிக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

--------------------------------------------------------------------

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்றிருக்காமல் பண்டங்கள், கல்வி மற்றும் மருத்துவ உதவி ஆக மீளாய்வாண்டின் போது ரூபா 600,998 தொகையொன்று சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றிருக்காமல் பயிற்சி வழங்கள் விடயங்களுக்காக ரூபா 35,000 சபை நிதியத்தில் இருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது சபையினால் பல்வேறு கருமங்களுக்காக முறையான பெறுகைகள் முறைமை ஒன்று கடைபிடிக்கப்படாமல் வெல்லவாய நகரத்தில் அமைந்துள்ள 7 தனியார் நிறுவனங்களில் இருந்து பல்வேறு சந்தர்ப்பங்களில் ரூபா 221,998 தொகைக்கான கட்டிடப் பொருட்கள் மற்றும் பல்வேறு உபகரணங்கள் கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

3.3 ஒப்பந்த நிருவாகம்

-----------------------------------

மீளாய்வாண்டு ஜனவரி முதல் செப்டம்பர் வரையான காலப் பகுதியில் 04 பல்வேறு நிர்மாண வேலைகளுக்காக அளவைப் பத்திரம் தயாரிக்காமல் ரூபா 841,862 ஒப்பந்த சங்கங்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

3.4 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

----------------------------------------------------------------------------

(அ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பான செயற்பாட்டுத் திட்டம் ஒன்று சபையினால் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் குறிப்பிட்ட காணிக்கு வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் அனுமதிப்பத்திரம் ஒன்று 2012 ஜனவரி 16 திகதி வழங்கியிருந்த போதிலும் திட்டத்தை செயற்படுத்துவதற்காக இது வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) வெல்லவாய நகரத்தில் குவிக்கப்படும் குப்பைகள் முறையற்ற விதமாக ஆனபல்லம அரசாங்க தேக்குக் காணியில் போடப்பட்டிருந்ததுடன் பொலிதீன் போன்ற விரைவில் உக்காத பொருட்கள் பகுதி பூராகவும் காணப்பட்டது. குப்பை கொட்டப்படும்

இடத்துக்கு வரும் யானைகளினால் பக்கத்து கிராமங்களுக்கு சேதம் விளைவிக்கும் நிலைமை ஒன்று காணப்பட்டது.

4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

---

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

மீளாய்வாண்டிற்காக சபையினால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் மூலம் மதிப்பீட்டு வருமானம், செலவுகள் மற்றும் ஆண்டிற்கான உள்ளவாறான வருமானம், செலவுகள் இடையே காணப்பட்ட முக்கியமான முரண்களின் பிரகாரம் வருமானம் மற்றும் செலவுகள் கட்டுப்பாட்டின் போது பாதீடு ஆக்க பூர்வமான கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

---

மீளாய்வாண்டிற்காக சபையினால் வருடாந்த பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

4.3 உள்ளகக் கணக்காய்வு

---

மாகாண சபையின் உள்ளகக் கணக்காய்வு அலகின் மூலம் போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

---

2009 ஜுன் 09 திகதிய முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் னுஆயு.̇.2009(1) இலக்கங் கொண்ட முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டல் சுற்று நிருபத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமைப்பதற்காக மீளாய்வாண்டு வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

4.5 தீர்க்கப்படாமல் காணப்பட்ட பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

---

சபைக்கு 2013 ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த கணக்காய்வு ஐய வினா ஒன்றிற்கும் 2014 ஆண்டின் 05 ஐய வினாக்களுக்கும் மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட 02 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் இது வரை பதில் அனுப்பியிருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்